1979 நவம்பர் 2]

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், எல்.ஐ.சி.யிடமிருந்து 8 கோடி ரூபாய் 11 சதவிதம் வட்டிக்கு வாங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். தொழில் அபிவிருத்தி என்ற பெயரால் 4 சதவிதம் வட்டிக்கு கடன் கொடுக்கப்படுகிறது. அப்பேர்ப்பட்ட தொழிலுக்கு மின்சாரம் கொடுக்கக்கூடிய இந்த அமைப்புக்கு அந்த அளவுக்கு குறைந்த வட்டிக்கு ஏன் கடன் வாங்கவில்லை? குறைந்த வட்டிக்கு வாங்க முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஆங்கிலத்திலே சொல்வார்கள். Beggars are not chasses என்று சொல்வார்கள். இந்த வட்டிக்குத்தான் கொடுக்கிறார்கள். வேண்டுமென்றால் வாங்கிக் கொள்ளலாம்; இல்லை என்றால் இந்த வட்டி கொடுக்கக்கூடிய வேறு யாருக்காவது கொடுப்பார்கள்.

திருப்புல்லானி-தொண்டி பகுதியிலுள்ள புறம்போக்கு நிலங்கள்

* வினா எண். 63.—திரு. த. இராமசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லானியிலிருந்து தொண்டி வரையிலுள்ள சாலையின் கீழ்ப்புறம் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, திருப்புல்லானியிலிருந்து தொண்டி வரையிலுள்ள சாலையின் கிழ்ப்புறம் உள்ள அரசு நிலங்களை யாருக்கும் ஒதுக்கீடு செய்யவில்லை. காரணம் சேது சமுத்திரம் திட்டங்களுக்காக அந்த நிலம் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, இது என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டது. இந்தப் பகுதியிலே அதிகமாக புறம்போக்கு நிலம் உள்ளது. இந்த நிலங்களை, மதிப்பிற்குரிய வருவாய்த் துறை அமைச்சரவர்கள், யார் வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் வளைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே, இந்தப் பகுதியிலே எந்த அளவுக்கு, எப்படி நிலம் கொடுக்கப்படும் என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, திருப்புல்லானியிலிருந்து தொண்டிக்கு செல்லும் சாலைக்குக் கிழக்குப் பக்கத்தில் இருக்கிற நிலம் எல்லாம் சேதுசமுத்திரத் திட்டங்களுக்காக வைக்கப்பட்டிருப்பதால் யாருக்கும் கொடுக்கக் கூடாது என்று அரசு முன்னைலேயே

ஆணை போட்டிருக்கிறது. ஆனால் 20 அம்சத் திட்டக் காலத்தில் சிலருக்கு கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கும்போது, தேவைப்படுகிறபோது எந்தவித மான நஷ்டயீடும் இல்லாமல் அரசு எடுத்துக்கொள்ளும் என்று நிபந்தனை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள.

திரு. க. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த நிலங்களை யாருக்கும் கொடுப்பதற்கில்லை என்று சொன்னால், சேதுசமுத்திரத் திட்டம் ஏன் கால தாமதமாகிறது என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, சேது சமுத்திரத் திட்டம், சேலம் இரும்பாலைத் திட்டம் இவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் ஒரு எழுச்சி நாள் கொண்டாடப்பட்டது என்பதும், அதன் பிறகு இவை எல்லாம் மத்திய பேரரசினால் எடுத்துக்கொள்ளப்பட இருந்தது என்பதும், பின்னர் சேலம் இரும்பாலைத் திட்டம் மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதும் அனைவருக்கும் தெரியும். இது இந்த வினாவிற்கு சம்பந்தப்படவில்லை என்றாலும் உறுப்பினர்கள் கேட்கிறார்கள், தெரிந்த விவரங்களைச் சொல் கிறேன்.

(முற்பகல் 9-10)

அதற்குப் பிறகு, 1968-ல் இந்திய பேரரசு இதற்காக ரூ. 37.5 கோடி ஒதுக் கியது. அதற்குப் பிறகு காலதாமதமாகிக்கொண்டே இருந்தது. அதற்குப் பிறகு அரசு கேட்கிறபோது 1976-ல் ரூபாய் 65.50 கோடி இதற் காக ஒதுக்கியது. ஆனால் இதுவரை அத்திட்டம் நிறைவேற்றப்பட வில்லை. இன்று இந்த அரசு இது நிறைவேற்றப்படவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. அப்படிச் செய்வதால் மேல் நாடுகளில் இருந்து வருகிற வர்த்தகக் கப்பல்கள் பம்பாயிலிருந்து கிளம்பு மானால் நாகப்பட்டணத்திற்கு வருவதற்கு ஏதுவாக இருக்கும் தூத்துக்குடி வழியாக. இப்படி வராமல் போனால் 350 மைல்கள் இப்போது அதிக மாகப் போக வேண்டியிருக்கிறது. இப்படிப் போனால் அந்த 350 மைல்கள் குறையும். தூத்துக்குடி துறைமுகம் விருத்தியாகும். பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி விரிவாகும். அன்னியச் செலாவணி நமக்குக் கிடைக்கும். ஒரு ஆண்டுக்கு ஏறக்குறைய 232 லட்சம் ரூபாய் இதில் லாபம் கிடைக்கும். இந்த அரசு இதைப் போராடிப்பெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி, நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு நிலங்களைக் கொடுக்கும் உத்தேசம் உள்ளதா என்பது.

1979 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் சொல்லும்போது சொன்னேன், மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லாவிட்டாலும் உறுப்பினர்கள் விவரங்கள் கேட்கிறபோது, மக்களுக்கு தேவைப்பட்ட விவரங்கள் என்று தெரிவித்திருக்கிறேன்.

சாப்டூரில் உள்ள தோப்புகள்

* **வினா எண். 64—திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தில் தோப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?

(இ) மதுரை மாவட்டம், சாப்டூரில் நில உச்சவரம்பை மீறி ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் பழைய ஜமீன்தாரிடம் தோப்பு என்ற கணக்கில் உள்ளதா ?

(ஈ) இதில் முறைகேடு எதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) 1—7—1959-ல், அல்லது அதற்கு முன்பும் தோப்பாக இருந்த நிலங்களுக்கு நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அவை தோப்பாக தொடர்ந்து இருக்கும் வரையில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(இ) 394.51 ஏக்கர்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

(ஈ) எந்தெந்த நிலங்கள் தற்சமயம் தோப்பாக பராமரிக்கப்படவில்லையோ அவைகள் மறு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கையில் உள்ளன. மற்றும் மேற்படி நிலங்களில் விவசாயத்திற்கு இலாயக்கான நிலங்களைப் பார்வையிட்டு அவைகளின் விதிவிலக்கை ஏன் ரத்து செய்யக் கூடாது என்று நில உடைமையாளர்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டு விசாரணையில் உள்ளது.

திரு. இரா. முத்தையா : இந்தத் தோப்புக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது, அந்த நிலங்கள் தோப்பு என்ற தன்மையில்லாமல் பொட்டல் தரிசுகளாக இருப்பதும், விளை நிலங்களாக இருப்பதும் தோப்பு என்ற கணக்கில் பலயிடங்களில் தவறுதல்கள் இருந்து